# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 204/மா/2017

ஆணை எண். 122/2018

நாள் : 17/05/2018

திரு R. சிவசுப்ரமணியன்,
தூத்துக்குடி – 628 008. – முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
தூத்துக்குடி. – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி மாநகராட்சி, மில்லர்புரம், எண்.107J/169/1, முகவரியில் வசிக்கும் திரு R. சிவசுப்ரமணியன் அவர்களின் 17.10.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 204/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் மனு மற்றும் பிற ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டுக் கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தூத்துக்குடி மாநகராட்சி, மில்லர்புரம், எண்.107J/169/1, முகவரியில் வசிக்கும் திரு R. சிவசுப்ரமணியன் என்பவர், தூத்துக்குடி மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற காலம் சென்ற திரு A. இராமச்சந்திரன் அவர்களின் மகன் ஆவார். இவர், கீழ்க்காணும் கோரிக்கைகள் குறித்து ஆணையிட நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-

(1) முறையீட்டு மனுதாரரான தனக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கவும் ;

(2) தற்காலிகப் பணி நீக்கத்தில் இருந்த தனது தந்தையார் திரு A. இராமச்சந்திரன் மீண்டும் பணியமர்த்தப்பட்ட பின் 22.10.2007 முதல் 30.04.2012 வரை உள்ள நாட்களுக்கு ஊதியம் வழங்கவும் ;

(3) ஆறு திங்கள்களுக்கு மேலாக தற்காலிகப் பணி நீக்கத்தில் இருந்த தனது தந்தையாரின் பிழைப்பூதியத்தை 75 சதவிகித அளவுக்கு உயர்த்தி வழங்கிடவும்.

முறையீட்டு மனுதாரரின் மேற்குறிப்பிட்ட கோரிக்கைகள் அனைத்துமே பணி அமைப்பு சம்பந்தப்பட்டவை ஆகும். தற்காலிகப் பணி நீக்கம் முடிவுக்கு வந்தபின், பணியில் சேர்ந்த நாள் முதல் 30.04.2012 முடிய உள்ள காலத்திற்கான ஊதியம் வழங்குவது மற்றும் தற்காலிகப் பணி நீக்கக் காலத்திற்கான பிழைப்பூதியத்தை 75 சதவிகித அளவிற்கு உயர்த்துவது போன்ற கோரிக்கைகள் குறித்து முறையீட்டு மனுதாரரின் தந்தையார் திரு A. இராமச்சந்திரன் 13250/10 எண்ணிட்ட நீதிப்பேராணையை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தாக்கல் செய்துள்ளார். எனவே, நீதிமன்றமொன்றின் முன் நிலுவையில் உள்ள எந்தவொரு நேர்வு குறித்தும் இம்முறைமன்ற நடுவத்தால் எந்தவொரு ஆணையும் பிறப்பிக்க இயலாது. மேற்குறிப்பிட்ட நீதிப்பேராணை வழக்கில் வழங்கப்படும் தீர்ப்பின் அடிப்படையில் செயல்படவும் மற்றும் பணிவிதிகளின்படி செயல்படவும் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி முடிவு செய்யப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, மே திங்கள், 17–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு R. சிவசுப்ரமணியன்,
   எண்.107 ஜே/169/1, மில்லர்புரம்,
   தூத்துக்குடி – 628 008.

2. மாநகராட்சி ஆணையர்,
   தூத்துக்குடி மாநகராட்சி,
   தூத்துக்குடி.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்